## குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி

முன்னிலை: திரு.R.மனோகரன், B.A.,B.L.,
குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.

**வழக்கு எண்.C.C.17 /2021**

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26 ம் தேதி புதன் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி. தவமணி Bench Clerk அவர்களால் உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா. 1**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வளர்மதி திருஞானசெல்வி | தொழில் | : அரசு பள்ளி ஆசிரியர் |
| கணவர் பெயர் | : குலசேகரன் | சமயம் | : |
| கிராமம் | : செஞ்சி | சாதி | : |
| வட்டம் | : செஞ்சி | வயது | : 42 |

தேதி 26.04.2023
சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு. R.சதிஷ் Gr.1 - 193 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1. நான் வணக்கம்பாடி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் இறந்துபோன குலசேகரன் என் கணவர். என் கணவர் செத்தவரை நியாய விலை கடையில் வேலை பார்த்தார்.

2. கடந்த 25.11.2019 ம் தேதியன்று காலை 9.00 மணிக்கு என் கணவர் செத்தவரை நியாய விலைக்கடைக்கு அவரது இருச்சக்கர வாகனத்தில் சென்றார். செஞ்சி கோட்டை அருகில் முட்டுகாடு அருகே என் கணவர் இருச்சக்கர வாகனத்தில் சென்றகொண்டியிருந்தபோது திருவண்ணாமலையில் இருந்து செஞ்சி நோக்கி வந்த மாருதி சிப்ட் கார் எண்.KA 03AG0968 என்ற கார் வேகமாக வந்து மோதியதில் என் கணவரின் தலையிலும், காலிலும் அடிப்பட்டது. என் கணவரின் கால் உடைந்துவிட்டது. மேற்படி விபத்து நடந்ததை என் கணவருடன் வேலை பார்த்த பழனி வேல் என்பவர் எனக்கு தகவல் சொன்னார். உடனே சம்பவ இடத்திற்கு சென்று அடிப்பட்டியிருந்த என் கணவரை மீட்டு ஆம்பலன்ஸ் மூலமாக செஞ்சி அரசு மருத்துவமணைக்கு சென்றோம். செஞ்சி அரசு மருத்துவமணையில் இங்கு முடியாது என்று கூறி பாண்டிச்சேரி ஜிக்மர் மருத்துவமணைக்கு அனுப்பி வைத்தார்கள். பாண்டிச்சேரி ஜிப்மர் மருத்தவமணைக்கு ஆம்பலன்சில் என் கணவரை அழைத்து சென்ற நிலையில் போகும் வழிலேயே என் கணவர் இறந்துவிட்டார். என் கணவர் மீது மோதிய காரில் 3 நபர்கள் இருந்தார்கள். அவர்கள் பெயர் கோபிநாத், முகமது சுகிஷ், ே ஹமத் ஆகியோர்கள் ஆவார்கள். மேற்படி மூவரும் செஞ்சி அரசு மருத்துவமணைக்கு வந்திருந்தார்கள். அப்போது காரை

ஓட்டிவந்தவர் முகமது ஹரிஷ் உல்லா என்றும் அவர் ஓடிவிட்டதாக மேற்படி மூவரும் சொன்னார்கள். என் கணவர் ஓட்டிச்சென்ற இருச்சக்கரவாகனத்தின் எண்.TN16Z1108 ஆகும்., என் கணவரை பிரேத பரிசோதணை செய்த சடலத்தை ஒப்படைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(25.11.2019 தேதியிட்ட புகார் மனு அ.சா-ஆ .1 ஆக குறியிடுசெய்யப்படுகிறது).**

**குறுக்குவிசாரணை:**

**3.** எந்த தேதியில் விபத்து நடந்தது என்றால் 25.11.2019. எத்தனை மணிக்கு என்றால் காலை 9.00 மணி. விபத்து நடந்தபோது நான் எங்கு இருந்தேன் என்றால் என் மகளை பள்ளிக்கு அழைத்து சென்றேன். எந்த பள்ளிக்கு என்றால் மௌன்ட் தியாகதுருவம் பள்ளி. செஞ்சியில் இருந்து எத்தனை கி.மீ தள்ளி மேற்படி பள்ளி உள்ளது என்றால் 60 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மேற்படி விபத்து சம்பவத்தை போன் மூலம்தான் எனக்கு சொன்னார்கள் என்றால் ஆமாம். போன் வந்தபோது எங்கு இருந்தேன் என்றால் மேற்படி பள்ளிக்கு செல்லும் வழியில் இருந்தேன். நான் வழியில் இருந்த இடத்திற்கும் , செஞ்சிக்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 35 கி.மீ தூரம் இருக்கும். இருச்சக்கர வாகனத்தில் மேற்படி பள்ளிக்கு சென்றேனா என்றால் இல்லை. பஸ்சில் சென்றியிருந்தேன்.

4. தகவல் தெரிந்தவுடன் செஞ்சிக்கு எப்படி வந்தேன் என்றால் காரில் வந்தேன். மேற்படி கார் செஞ்சியில் இருந்து வந்ததா என்றால் இல்லை. அங்கு இருந்த காரில் வந்தேன். என் கணவர் சென்ற இருச்சக்கர வாகனத்தின் எண் தெரியுமா என்றால்TN16Z1108 . என் கணவரின் இருச்சக்கர வாகனத்திற்கு லைசன்ஸ், இன்சூரன்ஸ் வைத்துள்ளாரா என்றால் இருந்தது. லைசன்ஸ், இன்சூரன்ஸ் ஆகியவற்றை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கேட்டார்கள் வாங்கி பார்த்துவிட்டு கொடுத்தார்கள். எனக்கு எத்தனை மணிக்கு தகவல் தெரிந்தது என்றால் பதட்டத்தில் நேரம் தெரியவில்லை. பதட்டத்தில் கத்தி , டிரைவரிடம் பஸ்சை நிறுத்த சொன்னேன்.

5. நான் வந்தபோது எல்லோரும் செஞ்சி அரசு மருத்துவமணைக்கு வந்துவிட்டார்களா என்றால் ஆமாம். என் கணவர் மேல்சிகிச்சைக்கு ஆம்பலன்சில் சென்றபோது இறந்துவிட்டதாக நான் கூறிய நிலையில் எந்த இடத்தில் செல்லும்போது வழியில் இறந்தார் என்றால் உயிர்போன இடம் தெரியவில்லை. செஞ்சி அரசு மருத்துதவமணையில் இருந்து வெளியே வந்து கொஞ்சம் நேரத்தில் சென்றதும்இறந்துவிட்டதாக சொன்னார்கள். ஆம்பலன்சில் நான் சென்றேனா என்றால்

இல்லை. காரில் இருந்ததாக நான் கூறிய 3 நபர்களின் பெயர்கள் யார் கூறியது என்றால் மருத்துவமனையில் இருந்தவர்கள் சொன்னார்கள். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் சம்பவ நடந்த அன்றைய தினமே புகார்கொடுத்தேன். நேரம் ஞாபகம்இல்லை. புகார் ஏற்கனவே எழுதி வைத்திருந்தார்களா என்றால் இல்லை. காவல் நிலையத்திற்கு சென்றபிறகுதான் எழுதப்பட்டது. மேற்படி புகாரை யார் எழுதியது என்றால் யார் எழுதியது என்று தெரியவில்லை. புகாரில் என்ன எழுதப்பட்டது என்று தெரியுமா என்றால் என் கணவருக்கு அடிப்பட்டது பற்றி எழுதப்பட்டது. விபத்து நடந்த முட்டுகாடு பகுதி சாலையில் இருப்புறமும் காடு என்றால் சரிதான்.

6. விபத்து நடந்த இடம் சாலை வளைவாக இருக்கும் என்றால் வளைவு முடிந்து சற்று தள்ளிதான். நேரான இடத்தில்தான் விபத்துநடந்தது. விபத்து நடந்த அடுத்த பகுதி வளைவு பகுதியா என்றால் இல்லை. வளைவான பகுதி விபத்து நடந்த பகுதியில் இல்லையா என்றால் வளைவு பகுதியை தாண்டி என் கணவர் வந்துவிட்டார். விபத்தை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். பின்னிட்டுதான் விபத்து இடத்தை பார்த்தேன்.

7. என் கணவருக்கு இருச்சக்கர வாகனம் ஓட்டும் உரிமம் , வாகனம் இன்சூரன்ஸ் எதுவும் இல்லை என்றால் இருந்தது. இன்சூரன்ஸ் மட்டும் புதுப்பிக்காமல் இருந்தது. விபத்து நடந்த இடம் முட்டுக்காடு என்பதாலும், வளைவு பகுதிஎன்பதாலும் அந்த இடத்தில்வேகமாக வாகனம் செல்வதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. வேகமாக கார் வந்ததனால்தான் விபத்தில் என் கணவர் இறந்துவிட்டார். என் கணவருடன் இருச்சக்கர வாகனம், கார் ஆகியவற்றில் உடன் சென்றபோது மிகுந்த கவனத்துடன்தான் வாகனத்தை ஓட்டுவார். என் கணவருக்கு அந்த சமயத்தில் புதிததாக அரசு வேலை கிடைத்த ஆர்வத்தில் அதிவேகமாக சென்றதில் விபத்து ஏற்படுத்திக்கொண்டார் என்றால் என் கணவர் எந்த சமயத்திலும் சாலை விதிகளை பின்பற்றியும், கவணத்துடன் மெதுவாகத்தான் ஓட்டிச்செல்வார். ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முழுவதுமாக முடிக்கப்பட்டது.

**மறுவிசாரணை**:இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளள்ப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.